07 APR 2009
Eastern University, Sri Lanka

# கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

## மூன்றாம் வருட கலைமாணித் தேர்வு - 2006/2007 (வெளிவாரி)

## (ஏப்ரல்/மே 2009)

## HC 302 இந்துக்கலைகள்

நேரம் : 03 மணித்தியாலங்கள்

எவையேனும் ஐந்து வினாக்களுக்கு விடை தருக.

---

01. வட இந்தியாவில் குப்தர்காலத்தில் இடம்பெற்ற இந்துக்கோயிற் கட்டிடக் கலையின் வளர்ச்சிக் கட்டங்களைப் பரிசீலனை செய்க?

02. தமிழ் நாட்டில் கி.பி. 10ஆம் நூற்றாண்டு வரையிலான இந்துக்கட்டிடக் கலையின் வளர்ச்சிப் போக்கினை இலக்கிய தொல்பொருட் சான்றுகளின் துணைகொண்டு சுருக்கமாக விளக்குக.

03. “திராவிடக் கலைப்பாணியின் உன்னத பரிமாணங்களைச் சோழர் காலத்துக்குரிய கற்றளிகளில் அவதானிக்க முடிகிறது.” இக்கூற்றினை எந்தளவுக்கு ஒப்புக்கொள்வீர்.

04. தென்னாட்டில் பல்லவர் பாண்டியர் காலத்திற் வளர்ச்சிபெற்றிருந்த ஓவியக்கலை பற்றி விளக்குக.

05. இந்துப்பண்பாட்டு வரலாற்றில் சிற்பக்கலை தொடர்பான மேல்வருவன பற்றிச் சுருக்கமான குறிப்புகள் எழுதுக.
   (அ) மாமல்லபுரத் திறந்த வெளிப் பாறைச் சிற்பங்கள்
   (ஆ) கஜுராஹோ சிற்பங்கள்
   (இ) விஜய நகர காலத்துக் கோயிற் சிற்பங்கள்

06. இந்துக்களின் சிற்ப ஓவியக் கலைமரபுகளின் வளர்ச்சியில் மேல்வருவன பெறுகின்ற முக்கியத்துவத்தினை விளக்குக?
   (அ) தஞ்சைப் பெரிய கோயில்
   (ஆ) மதுரை மீனாட்சி சுந்தரேஸ்வரர் ஆலயம்

07. பரத நாட்டியக் கலையின் மறுமலர்ச்சியில் ருக்மணி அருண்டேலும் கலாஷேத்திரமும் பெறுகின்ற முக்கியத்துவத்தை விளக்குக?

08. எவையேனும் நான்கிற்குக் குறிப்புரை எழுதுக.
   (அ) நாட்டிய சாஸ்திரம்
   (ஆ) பல்லவர் காலத்துக்கும் முற்பட்ட தமிழகத்துக் கட்டிடக்கலை
   (இ) கோயில்கள் வளர்த்த இசைக்கலை
   (ஈ) விஷ்ணுதர்மோத்திர புராணத்தில் நுண்கலைகள் பற்றிய குறிப்புக்கள்
   (உ) சிற்பசாஸ்திரங்கள்

*********